1973 மார்ச் 7]

(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி ஏதேனும் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளை மருத்துவர்களோ மற்றவர்களோ அவ்வளவாக நாடிச் செல்வதில்லை. என்ற குறைபாடு இருக்கிறது. அதைக் களைவதற்காகவாவது வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை இனிமேலாவது அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கிராமப் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளில் இரண்டு வகையான மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஒன்று சாதாரண டிஸ்பென்சரி மற்றொன்று ப்ரைமரி ஹெல்த் சென்டர் அதாவது ஆரம்ப சுகாதார நிலையங்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிற இடங்களில் படிப்படியாக அங்கே பணியாற்றுகிற டாக்டர்களுக்கும் மற்ற மருத்துவ நல உதவியாளர்களுக்கும் வீடுகள் கட்டப்படுகிற திட்டம் இருக்கிறது. ஆண்டுக்கு பத்து, இருபது இடங்களில் கட்டப்படுகின்றன. ஆனால், பொதுவாகவே கிராமங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு வீடு கட்டுவது என்ற திட்டம் நிறைவேற்றப்படக்கூடியதாக இல்லை, அதற்கான பெரு நிதி செலவழிக்க வாய்ப்பு இல்லை. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவது என்ற திட்டம் இடையில் சில ஆண்டுகளுக்கும் முன் ஒத்திவைக்கப்பட்டது. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அதிலே முன் உரிமை தர வேண்டியவர்களுக்குத் தகுந்த அளவில் வீடு கட்ட முயற்சிக்கப்படும்.

அரசு அலுவலகங்களில் தமிழ்

* 266. வின—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

தலைமைச் செயலகத்திலும், துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும் இருந்து எத்தனை விழுக்காடு (சதவிதம்) ஆணைகள் தமிழில் பிறப்பிக்கப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைமைச் செயலகத்திலும், துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும் முறையே 9 சதவிகிதம், 24 சதவிகிதம் தமிழில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன்: தமிழ் அன்னையே எல்லாத் துறைகளிலும் ஆட்சி செலுத்தவேண்டுமென்ற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று கடைசி நாள் விவாதம். நாலைந்து தலைவர்கள் பேசி முதல் அமைச்சர் அவர்களும் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. எனவே கேள்வி நேரத்தை நீட்டிக்கமுடியாது. ஆகவே வர்ணனை இல்லாமல் கேள்வி கேளுங்கள். நேரடியாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்திற்குள் கேட்டு முடித்திருப்பேன். தமிழே எல்லாத் துறைகளிலும் ஆட்சி செலுத்தவேண்டும் என்ற கொள்கையை உடைய நம் அரசு காலத்தில்தான் எல்லாத் துறைகளிலும் தமிழ் வரவேண்டும் என்ற அடிப்படையில் 100-க்கு 100 விழுக்காடு எல்லாத் துறைகளிலும் தமிழ் கையாளப்பட்டு கோப்புகள் எல்லாம் தமிழிலேயே வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் படிப்படியாக பல்வேறு முன்னேற்றங்கள் காண வேண்டியிருக்கிறது. தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவருகிற வகையில் நான்கு கட்டங்கள் வகுக்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம். அந்த முறையில் மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களிலும், துறை அலுவலங்களிலும் செயல்படுத்தப்பட்டு இப்போது தலைமைச் செயலகத்தின் புகுத்தி வருகிறோம். தமிழ் வளர்ச்சித் துறை என்று தனித்து இயங்கி கொண்டிருக்கிறது. மேலும் பல அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இப்படி தக்க ஊக்கம் தருகிற வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : ஆங்கிலத்தில் இருக்கிற எல்லாச் சொற்களையும் தமிழில் மொழிபெயர்க்கவில்லை என்ற காரணத்தால்தான் இந்த விகிதாசாரத்தை உயர்த்தமுடியவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதல்ல குறைபாடு. அண்மையில் ஆட்சிச் சொல் அகராதி மூன்றாவது பதிப்பு தயாரித்து எல்லாப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், எழுத்தர்கள், இளநிலை எழுத்தர்கள், இவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். தட்டச்சுத் துறையிலும், சுருக்கெழுத்து துறையிலும் பயிற்சி அளித்து வரப்படுகிறது, அதற்கு ஊக்கம் தருகிறோம். பொது மக்களின் ஒத்துழைப்போடு இவற்றைச் செய்யவேண்டியிருக்கிறது. இதில் பயிற்சி பெறவேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே படிப்படியாக இதை நிறைவேற்றவேண்டியதாகயிருக்கிறது.